நாள்.05.06.2025.

அசல் வழக்கு எண்.60/2021

வா சா.1

பெயர். ஆவுடையப்பன்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

நான் வழக்கில் கூடுதல் பரிகாரம் என்ன கேட்டேன் என்ற விவரம் எனக்கு தெரியாது. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரை உள்ள விவரங்களை எனது வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் குலசேகர நங்கை அம்மன் திருகோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவில் 7 சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டதா என்றால் 5 சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது.

மேற்படி கோவிலுக்கு வருடத்திற்கு ஒருமுறை ஆடி மாதம் கோவில் திருவிழா நடத்தபடும் என்றால் சரிதான். திருவிழா நடைபெறும் போது அம்மன் வாகனத்தில் வீதி உலா வரும் என்றால் சரிதான். நான் கேட்டுள்ள பரிகாரம் காலாவதி தோஷத்தால் பாதிக்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து அரசு புறம்போக்கு என்று கட்சி செய்து வரும் நிலையில் அரசு தரப்பை கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு அவசிய தரப்பினரை கட்சி சேர்க்காத தோஷத்தால் பாதிக்கபட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

1வது பரிகாரத்திற்கு செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறு என்றால் சரியல்ல. 1ம் வது பரிகாரத்திற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்துவதற்காக நான் மதிப்பீடு செய்தது

தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதால் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் திருகோவில் அமைந்துள்ளதால் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

MANJULA C

Digitally signed by MANJULA C
Date: 2025.06.05 14:11:50 +0530